4th March 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM: யாரோ ஒருவர் பட்டம் பெற்றிருக்கிறார் என்றால், அவர் இந்தப் பள்ளிக்கூடத்தில்தான் படித்தாரோ என்னவோ. இருந்தாலும், பயன் எவ்வளவுக்கு இருக்கிறதோ அவ்வளவுக்கு செலவழிக்கப்படும்.

SRI A. A. RASHEED: May I know whether steps have been taken to bring in adult women also under this scheme?

THE HON. SRI C. SUBRAMANIAM: Man includes woman also.

SRI N. MARUDACHALAM: ஸார், முதியோர் கல்வித் திட்டத்தை அவசியம் உள்ள இடங்களிலெல்லாம் ஏற்படுத்த உத்தேசமுண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அவசியம் எங்கு இருக்கிறதோ அங்குதான் ஏற்படுத்தப்படுகிறது.

SRI S. NAGARAJA MONIGAR: ஸார், முதியோர் எந்தெந்தத் துறையில் முன்னேறியிருக்கிறார்கள் என்று கவனிக்க ஒரு கமிட்டி அமைத்தால் நல்லது என்று கனம் ஸ்ரீ வேதரத்தினம் சொன்னார்கள்; 18 வயதுக்கு உட்பட்டவர்கள் தான் முதியோர் கல்வியில் பயனடைகிறார்கள் என்றாலும், கனம் அங்கத்தினர் விநாயகம் எந்த வயது வரை என்று தெரியாததால், இறக்கும் சமுதாயத்தினருக்கு இது வேண்டியது அவசியமில்லை என்று கருதுகிறார்கள்; இந்த சந்தர்ப்பத்தில் இவ்வளவு தூரம் பயன் என்று தெரியாது ஆகையால், அதை விடுத்து வேறு வகையில் செய்யலாமா என்று கருதுகிறார்கள்......

DEPUTY SPEAKER: The hon. Member is making a speech.

SRI S. NAGARAJA MONIGAR: I am coming to the question. அதை நல்ல முறையில் நடத்தத் தவறிவிட்டதாலா இந்த நிலை? இது இறுதியான முடிவா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அவர்கள் சொன்ன குழப்பத்தில், எனக்கே குழப்பமாக இருக்கிறது; என்ன கேள்வி என்று புரியவில்லை. (சிரிப்பு)

Beedi Workers (Scope of Factories Act)

* 919 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சுருட்டுத் தொழிலாளர்கள், தொழிற்சாலை சட்டத்திற்குட்பட்டவர்களல்லவென்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்திருப்பதைக் குறித்து சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: The question whether an appeal should be filed in the Supreme Court against the judgment of the High Court was considered and it was dropped as the Government were advised that this was not a fit case to be taken on appeal. The question of amending the Factories Act suitably has already been taken up with the Government of India and their decision is awaited.

SRI S. M. ANNAMALAI: கொடுக்கப்பட்டிருக்கும் தாள்களில், தமிழ் கேள்வியில் இது "சுருட்டு தொழிலாளர்கள்" என்று இருக்கிறது; இங்கிலீஷில் "Beedi Workers" என்று இருக்கிறது. கனம் அமைச்சர் கொடுத்த பதில் சுருட்டு தொழிலாளிகள் பற்றியா அல்லது பீடித் தொழிலாளர்கள் பற்றியா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : எனக்கு பீடியும் தெரியாது, சுருட்டும் தெரியாது ; இரண்டும் தெரியாது. ஆனால் பீடியும் சுருட்டும் ஒன்றுதான், சிகார்தான் வேறு.

SRI S. M. ANNAMALAI : சென்னை உயர்நீதி மன்றத்திலே இப்படிப் பட்ட வழக்கு சென்று, அதன் மூலமாக பீடி முதலாளிகள், மத்திய கண்ட்ராக்டர்களை வைத்து, தொழிலாளிகளை அவர்கள் மூலம் வைத்து, இந்த சட்டத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல என்ற முறையில் செய்ததால், கனம் அமைச்சர் சொன்னபடி சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்வது அவசியமில்லை என்றும், மத்திய சர்க்காரே இதுபற்றி யோசித்துக்கொண்டு இருக்கிறார்கள். இதற்கு மத்தியில் இதனால், தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படவில்லை. ஏனென்றால், இப்பொழுது இருக்கும் பீடி இண்டஸ்ட்ரியல் ப்ரிமிஸஸ் ஆக்ட் பிரகாரம், யார் ரெஜிஸ்டர் செய்யவேண்டும் என்ற பிரச்சினை வரும்போது ட்ரேட் மார்க் ஓனர் ரெஜிஸ்டர் செய்ய வேண்டுமா, செய்ய வேண்டாமா என்ற பிரச்சினை எழுந்தது. இதற்கு மத்தியில் எந்தக் கஷ்டமும் தொழிலாளர்களுக்கு ஏற்படவில்லை.

SRI K. VINAYAKAM : Instead of approaching the Central Government to amend the Factories Act to suit the provisions of our Beedi Workers' Act, would it not be a better step to consider once again our Beedi Workers' Act and amend it to suit the Factories Act ?

THE HON. SRI R. VENKATARAMAN : This is in the Concurrent List. Whether you amend the Beedi Act or the Factories Act, the concurrence of the Government of India has to be obtained.

SRI S. M. ANNAMALAI : புகையிலை லைசென்ஸ் கொடுக்கும்போது, மத்திய சர்க்காரை வற்புறுத்தி, யார் யார் பீடி பாக்டரிகளை வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டுந்தான் புகையிலை லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரை வற்புறுத்த நம் சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

DEPUTY SPEAKER : How does this arise out of the main question ?

THE HON. SRI R. VENKATARAMAN : Still I shall answer that. கனம் அங்கத்தினர் சொல்வதற்குப் பல மாதங்களுக்கு முன்பே, மத்திய சர்க்காருக்கு எழுதி, அவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்ல, தொழில் சம்பந்தமாக விதிகள் தொழில் சட்டத்தோடும். தொழிலாளிகள் சம்பந்தமாக தொழிலாளிகள் சட்டத்தோடும் விதிகள் இணைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

Dam across Mangarai River.

* 1041 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் ஆண்டு டிசம்பர் மீ 19-ம் தேதியில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் தாலுகாவில் சுற்றுப்பிரயாணம் செய்கையில், ஆத்தூர் தொகுதி கோடல்வாவி மற்றும் சுற்றுவட்டார கிராம பொது மக்கள் சார்பாக மாங்கரை ஆற்றில் ஓர் அணை கட்டி அதன் மூலம் சுமார் 1,500, 2,000 ஏக்கர் பாசனவசதி செய்து கொடுக்கும்படி மகஜர் கொடுக்கப்பட்டதா ?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.